தஞ்சை வடக்கு மாவட்டம், மயிலாடுதுறை நாடாளுமன்ற தொகுதியில் இந்தியா கூட்டணி வேட்பாளர் ஆர்.சுதாவை அமோக வெற்றி பெறச் செய்த பாபநாசம் சட்டமன்ற தொகுதி வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் பொதுக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, மு.சண்முகம் எம்.பி, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ, தாட்கோ தலைவர் உ.மதிவாணன், தேர்தல் பணிக்குழு செயலாளர் குத்தாலம் பி.கல்யாணம், மாவட்டக் கழக நிர்வாகிகள் கோவி. அய்யாராசு, எஸ்.துரைமுருகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணா மூர்த்தி, மாநில நிர்வாகிகள் ஆடுதுறை மு.உத்திராபதி, டி.ஆர்.கே.விஜயன், தஞ்சை வடக்கு மாவட்ட இந்திய தேசிய காங்.தலைவர் டி.ஆர்.லோகநாதன், இந்திய கம்யூனிஸ்ட் மு.அ.பாரதி, ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக முன்னோடிகள் உள்ளனர்.

மதம் பிடித்த மோடியை அடக்கும்

அங்குசமாக இருந்து நாட்டைக் காப்பாற்றியது தி.மு.க.!

நீலகிரியில் ஆ.ராசா எம்.பி. பேச்சு!

நீலகிரி, ஜூன் 22 - வாக்களித்த நீலகிரி மக்களவை தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டத்தில் ஈரோட்டில் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா பேசினார்.

நடந்து முடிந்த நீலகிரி மக்களவை தேர்தலில் இந்தியா கூட்டணி கட்சிகளின் கழக வேட்பாளர் ஆ.ராசா தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட பாஜக வேட்பாளர் எல்.முருகனை காட்டிலும் 2லட்சத்து 40 ஆயிரம் வாக்குகள் அதிகம் பெற்று வெற்றி பெற்றார்.

இந்நிலையில் தனக்கு வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் நீலகிரி தொகுதிக்கு உட்பட்ட ஈரோடு மாவட்டம், தாளவாடி, கடம்பூர் உள்ளிட்ட மலை பகுதிகளுக்கு ஆ ராசா வருகை தந்தார். ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம் தலைமையில் அவருக்கு நிர்வாகிகள் உற்சாக வரவேற்பு அளித்தனர். அதனைத் தொடர்ந்து திறந்த வாகனத்தில் ஊர்வலமாக சென்று பொதுமக்களுக்கு நன்றி தெரிவித்தார்.

தாளவாடி பேருந்து நிலையம் முன்பு பொதுமக்களிடையே நன்றி தெரிவித்து எம் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா பேசுகையில் குறிப்பிட்டதாவது:

400 தொகுதிகளில் வெற்றி பெற்று அரசியல் சட்டத்தை மாற்றுவோம், திமுக என்ற கட்சி இருக்கவே இருக்காது என்று மோடி திமிர் பேச்சு பேசினார். தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தான் அரசியல் சட்டத்தை காப்பாற்றியிருக்கிறார்.

40 தொகுதிகளில் வெற்றி பெற்று திமுக என்ன கிழிக்கப் போகிறது என பேசுகிறார்கள். தாளவாடி பகுதிக்கு மற்றவர்கள் செய்ய முடியாததை நாங்கள் செய்திருக்கிறோம். இன்னும் செய்வோம் ஏனென்றால் ஆட்சி எங்கள் கையில் இருக்கிறது மத்திய அரசில் இருந்திருந்தால் பத்தாயிரம் கோடி கூடுதலாக கிடைத்திருக்கும் இப்போது இல்லை அவ்வளவுதான்.

பிரதமர் மோடியால் அரசியல் சட்டத்தை திருத்த முடியாது. ஆட்சி அமைக்க பெரும்பான்மை இல்லாத நிலையில் சந்திரபாபு நாயுடுவையும் பீகாரையும் மோடி நம்பியிருக்கிறார் பிரதமர் மோடியால் தனியாக ஆட்டம் போட முடியாது கடந்த ஆட்சியில் நாடாளுமன்றத்திற்கு மோடி வந்த போது அவரது கட்சியினர் மோடி மோடி என்றார்கள் தற்போது 237 இடங்களை பெற்று இருக்கிற நாங்கள் அவர் நாடாளுமன்றத்திற்கு வந்தால் போடி போடி என்று கூறுவோம்.

ஒரே நாடு ஒரே மொழி ஒரே மதம் என்று கூறிய மதம் பிடித்த மோடியை அடக்கும் அங்குசமாக இருந்து இந்தியாவை காப்பாற்றியது திமுக. ஆட்சிக்கு வர முடியவில்லை ஒன்றிய அமைச்சர் ஆக முடியவில்லை என நீங்கள் கவலைபட வேண்டாம். ஒன்றிய அரசின் அனைத்து நிதியும் கிடைக்கும்.ஆடி கறக்கிற மாட்டையும் பாடி கறக்கிற மாட்டையும் எப்படி கறக்க வேண்டும் என தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு தெரியும். உங்களது நாடாளுமன்ற உறுப்பினர் அமைச்சராக இருக்க வேண்டிய அவசியமில்லை.

நீலகிரி தொகுதிக்கு அனைத்து திட்டங்களையும் கொண்டு வருகிற ஒரு நல்ல நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பேன்என வாக்களித்த உங்களுக்கு உறுதி கூறுகிறேன் இவ்வாறு அவர் பேசினார்.

தொடர்ந்து சத்தியமங்கலம் பேருந்து நிலையம் அருகே வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

நிகழ்வில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எல்.பி.தர்மலிங்கம், தாளவாடி ஒன்றிய கழக செயலாளர் சிவாண்ணா, சத்தியமங்கலம் நகர கழக செயலாளரும், நகர்மன்ற தலைவருமான ஜானகி ராமசாமி, சத்தியமங்கலம் ஊராட்சி ஒன்றிய தலைவர் கே.சி.பி.இளங்கோ அரியப்பம்பாளையம் பேரூர் கழக செயலாளர் வழக்கறிஞர் செந்தில்நாதன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், துணை அமைப்புகளின் நிர்வாகிகள், கழக செயல் வீரர்கள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர் .

உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் -

இந்தியாவிலேயே முதல் இடத்தில் தமிழ்நாடு இருக்கிறது!

‘தினத்தந்தி’ தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை. ஜூன் 22 - உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் தமிழ்நாடு 49 சதவிகிதம் பெற்று இந்தியாவிலேயே முதல் இடத்தில் உள்ளது என தினத்தந்தி நாளோடு 20.06.2024 அன்று தலையங்கத்தில் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

அத்தலையங்கம் வருமாறு:

உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் தமிழ்நாடு 49 சதவிகிதம் பெற்று இந்தியாவிலேயே முதல் இடத்தில் இருக்கிறது.

‘கல்வி சிறந்த தமிழ்நாடு’ என்ற மகாகவி பாரதியாரின் பாடலுக்கேற்ப, தமிழ்நாடு எப்போதும் கல்வியில் சிறந்து விளங்கி வருகிறது. குறிப்பாக, உயர் கல்வியில் இந்தியாவில் முதலிடம் பிடித்து முத்திரை பதித்துள்ளது. கல்வி வளர்ச்சியில், தமிழ்நாட்டில் இதுவரை இருந்த முதல் அமைச்சர்கள் அனைவருமே அதிக முனைப்பு காட்டினார்கள். அந்த வரிசையில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினும் ஆட்சி பொறுப்பேற்றது முதல் கல்விக்காக அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறார். கல்வித் துறை சார்ந்த நிகழ்ச்சிகளில் எல்லாம், “கல்விதான் உங்களிடமிருந்து யாராலும் திருடமுடியாத சொத்து” என்று அடிக்கடி சொல்லி வரும் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், அதற்கேற்றாற்போல், பள்ளிக் கூட கல்வியிலும், உயர்கல்வியிலும் நிதிநெருக்கடி எத்தனை இருந்தாலும் பல்வேறு திட்டங்களையும், சலுகைகளையும் நிறைவேற்றி வருகிறார்.

தலையங்கம்

தினத்தந்தி

20.6.2024 (விளம்பரக்கிழமை)

உயர்கல்வியில் முத்திரை பதித்த தமிழ்நாடு!

அதிலும் உயர்கல்வியில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் காலம், பொற்காலம் என்று சொல்லலாம். ஏனெனில் பள்ளிக்கூட படிப்பை முடித்து மாணவர்கள் இடைநிற்றல் இல்லாமல் உயர்கல்வியில் சேர வேண்டும், அவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்க வேண்டும் என்ற சீரிய நோக்கில் புதுமைப்பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம் ஆகிய திட்டங்களை நிறைவேற்றி உயர்கல்வியில் ஒரு மறுமலர்ச்சியை கொண்டு வந்துள்ளார். இதன் காரணமாக உயர்கல்வியில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து இருக்கிறது. அகில இந்திய உயர்கல்வி ஆய்வு நிறுவனத்தின் அறிக்கையின்படி, உயர்கல்வி மாணவர் சேர்க்கையில் தமிழ்நாடு 49 சதவிகிதம் பெற்று இந்தியாவிலேயே முதல் இடத்தில் இருக்கிறது. இது அகில இந்திய சராசரியைவிட 2மடங்கு அதிகமாகும்.

2022ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5ஆம் தேதி ஆசிரியர் தினத்தன்று 6ம் வகுப்பு முதல் பிளஸ்2 வகுப்பு வரை அரசுப் பள்ளியில் படித்து இடைநிற்றல் இன்றி உயர் கல்வியில் சேரும் மாணவிகளுக்கு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் ‘புதுமைப்பெண்’ திட்டத்தை அறிமுகப்படுத்தினார். இந்தத் திட்டம் மாணவிகளுக்கு மாதம் ரூ1,000 வழங்க வகை செய்கிறது. தற்போது, இந்த திட்டத்தின் மூலம் 2 லட்சத்து 73 ஆயிரம் மாணவிகள் கலை கல்லூரிகள், தொழிற் கல்லூரிகள் மற்றும் உயர் படிப்புகளில் சேர்ந்து மாதம் ரூ1,000 பெற்று வருகிறார்கள். இந்த திட்டத்தின் மூலம் அரசு பள்ளிக் கூடங்களில் படித்து உயர்படிப்பில் சேரும் மாணவிகளின் எண்ணிக்கை 34 சதவீதம் அதிகரித்துள்ளது. இதனைத்தொடர்ந்து மாணவர்களுக்கும் மாதம் ரூ1,000 வழங்கும் ‘தமிழ் புதல்வன்’ திட்டமும் வரும் ஆகஸ்டு மாதத்தில் இருந்து நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது.

அடுத்து, இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத ஒரு சீரிய திட்டமாக ‘நான் முதல்வன்’ திட்டத்தை மாணவர்களுக்காக 2022ஆம் ஆண்டு மார்ச் 1ஆம்தேதி அவருடைய பிறந்த நாளன்று முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். இந்த திட்டத்தின் நோக்கம், ஆண்டுக்கு 10 லட்சம் இளைஞர்களை கல்வியில், அறிவில், சிந்தனையில், ஆற்றலில், தொழிலில், தனித்திறமையில் மட்டுமல்லாமல், நிறுவனங்களை நடத்தும் தொழில் முனைவோராக மேம்படுத்தி நாட்டுக்கு வழங்குவதாகும்.

இந்தத் திட்டத்தினால் இது வரை 27 லட்சம் பேர் பயனடைந்துள்ளனர். ஒரு லட்சத்து 19 ஆயிரம் பேர் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர். இது போல, மேலும் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளதால் உயர்கல்வியில் தமிழ்நாடு முதல் இடம் பெற்றுள்ளதோடு மட்டுமல்லாமல், இந்தியாவுக்கே வழிகாட்டும் வகையில் அமைந்துள்ளது மிகவும் பெருமை அளிப்பதாக இருக்கிறது. உயர்கல்வித் துறை மேலும் உயரம் தொடட்டும்.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மதுபானக் கொள்கை முறைகேடு வழக்கு:

அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு ஜாமீன்!

டெல்லி நீதிமன்றம் உத்தரவு!

புதுடெல்லி, ஜூன் 22 - டெல்லி மாநில முதல்வர் கெஜ்ரிவால் மாநில மதுபானக் கொள்கை தொடர்பான பணமோசடி வழக்கில் அமலாக்கத்துறையால் கைது செய்யப்பட்டிருந்தார்.

கைது செய்யப்பட்ட அவரை சில நாட்கள் அமலாக்கத்துறை காவலில் எடுத்து விசாரணை மேற்கொண்டது. இதன்பின் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். பின்னர் நீதிமன்றம் அவரை நீதிமன்ற காவலில் அடைக்க உத்தரவிட்டது. அதன்படி டெல்லி திகார் ஜெயிலில் அடைக்கப்பட்டார்.

பின்னர் தன்னை கைது செய்தது சட்டவிரோதம் என உத்தரவிட வேண்டும் என டெல்லி உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். இந்த மனு மீதான விசாரணை நடைபெற்று கொண்டிருக்கும்போது தேர்தல் பிரசாரத்திற்காக ஜூன் 1ந்தேதி வரை இடைக்கால ஜாமின் வழங்கி உத்தரவிட்டது.

பின்னர் 2ந்தேதி மீண்டும் ஜெயிலில் அடைக்கப்பட்டார். இந்த நிலையில் அவரது நீதிமன்ற காவல் நேற்று முன்தினத்துடன் முடிவடைந்தது. இந்த நிலையில் விசாரணை நீதிமன்றம் அவரது நீதிமன்ற காவலை ஜூலை 3ந் தேதி வரை நீடித்துள்ளது.

இதனையயடுத்து, மருத்துவ பரிசோதனைக்காக கெஜ்ரிவாலுக்கு இடைக்கால ஜாமின் வழங்கக்கோரி டெல்லி நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கின் விசாரணை நேற்று முன்தினம் நடைபெற்றது. அப்போது டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு டெல்லி நீதிமன்றம் ஜாமின் வழங்கியது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் 101 வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு கோவை தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் 10ம் வகுப்பு +2ம் வகுப்பு அரசுப்பள்ளி மாணவ மாணவியர் 18 பேர்களுக்கு கல்வி உதவித்தொகை மற்றும் தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா கோவை மேட்டூரில் நடைபெற்றது. குறிச்சி வடக்கு பகுதிக்கழக செயலாளர் எஸ்.ஏ.காதர் கலந்து கொண்டு கல்வி ஊக்கத்தொகை , நலத்திட்ட உதவிகளை வழங்கினார். தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஜெகதீஷ்வரன் ஏற்பாட்டில் நடைபெற்ற இவ்விழாவில் மதுக்கரை ஒன்றிய துணை பெருந்தலைவர் பிரகாஷ், மாவட்ட கவுன்சிலர் ராஜன், வார்டு செயலாளர்கள் மாணிக்கம், டேனியல் ஜேசுதாஸ்,முத்தலி, குமரேசன் மற்றும் மணிகண்டன், சக்திவேல், சரவணன், அதர்மான்,ஆதவன்,ஆறுமுகம்,முத்துதிருமூர்த்தி, சம்சுதின்,சுலைமான் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம் உளுந்தூர்பேட்டை அருகே திருநாவலூர் மேற்கு ஒன்றியம் களமருதூர் கிராமத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடைபெற்ற இலவச பொது மருத்துவ முகாமை மணிக்ககண்ணன் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். அருகில் மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் அருணா தொல்காப்பியன், ஒருங்கிணைப்பாளர் அகிலன் மற்றும் மாவட்ட ஒன்றிய நகர கிளைக் கழக நிர்வாகிகள், முகாம் அமைப்பாளர்கள், மருத்துவர்கள், பொதுமக்கள் உட்பட பலர் உடன் கலந்து கொண்டனர்.

விக்கிரவாண்டி தொகுதியில் – கழகத்தின்

வெற்றிக் கனியை முதல்வரிடம் ஒப்படைக்க தீவிரப் பிரச்சாரம்!

கழக விவசாய அணிக் கூட்டத்தில் தீர்மானம்!

விழுப்புரம், ஜூன் 22 - “விக்கிரவாண்டி தொகுதியில் கழகத்தின் வெற்றிக் கனியை முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் ஒப்படைக்க தீவிரமாகப் பாடுபடுவோம்” என்று கழக விவசாய அணி நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தி.மு.க. விவசாய அணி மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் 20.6.2024 வியாழக்கிழமை மாலை 3.00 மணி அளவில் விழுப்புரத்தில் உள்ள “கலைஞர் அறிவாலயத்தில்” தி.மு.க. விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாநில தி.மு.க. விவசாய அணி இணைச் செயலாளர்கள் களிப்பட்டி மணி, பா.செந்தமிழ்செல்வன், குறிஞ்சி என்.சிவகுமார் துணைச் செயலாளர்கள் ஆர்.டி.ஏ.ஆதிசேஷன், தஞ்சை ஜித்து (எ) ராஜரத்தினம், மதுரை கணேசன், டி.எம்.அரியப்பன், பி.குணசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:

உலகத் தமிழர்களின் ஒப்பற்றத் தலைவரும் - இந்திய அரசியலின் மூத்த தலைவராகவும் - கலை, இலக்கியம், பத்திரிக்கை என அனைத்து துறைகளையும் தன் வசப்படுத்தி வரலாற்று சாதனை படைத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவினை தி.மு.க. விவசாய அணியின் சார்பாக மாநிலம் முழுவதும் உள்ள விவசாய அணியின் மாவட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்களின் ஆலோசனைகளைப் பெற்று, திராவிட மாடல் ஆட்சி நடத்தி வரும் கழகத் தலைவர் அவர்களின் அறிவிப்பின்படி ஏழையெளியோர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கியும் மிகச் சிறப்பாக நடத்திட வேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில், இந்திய துணைக் கண்டமே வியந்து நோக்கும் வண்ணம் தமிழ் நாட்டில் உள்ள 40 தொகுதிகளிலும் “இந்தியா கூட்டணி” வேட்பாளர்கள் அதிகவாக்கு வித்தியாசத்தில் மாபெரும் வெற்றிபெற வியூகம் அமைத்ததோடு, தீவிர பிரச்சாரம் செய்து, அவ்வெற்றிக்கு பாடுபட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களுக்கு தி.மு.க. விவசாய அணியின் மாநில நிர்வாகிகளின் இக்கூட்டம் தனது மனமார்ந்த பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஒவ்வொரு நாடாளுமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதி வாரியாக பிரச்சாரம் செய்து, பாசிச பா.ஜ.க. மற்றும் அ.தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களை படுதோல்வி அடையச் செய்ததோடு மட்டுமல்லாமல், இந்தியா கூட்டணி வேட்பாளர்களின் வெற்றியை உறுதி செய்திட, பாடுபட்ட தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளரும் - விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு தி.மு.க. விவசாய அணியின் மாநில நிர்வாகிகளின் இக்கூட்டம் தனது மனமார்ந்த பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.

“நீட்” நுழைவுத் தேர்வை அறிமுகப்படுத்திய போதிலிருந்தே, அது கிராமப்புற விவசாய மற்றும் விவசாயக் கூலி குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு எதிரானது என்று அறிக்கைகள், கண்டன ஆர்ப்பாட்டங்கள், பொதுக்கூட்டங்கள், கையெழுத்து இயக்கங்கள் ஆகியவற்றை தொடர்ந்து நடத்தி, அதனை எதிர்த்து வரும் தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் கூற்று மெய்ப்பிக்கும் வகையில், அண்மையில் நடைபெற்ற “நீட்” தேர்வு குளறுபடிகளுக்கு தி.மு.க. விவசாய அணியின் இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது. அத்துடன், முதல மைச்சர் கழகத் தலைவர் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வரும் “நீட்” நுழைவுத் தேர்வை நிரந்தரமாக ரத்து செய்திட வேண்டுமென ஒன்றிய பா.ஜ.க. அரசை கேட்டுக் கொள்கிறது.

வருகிற ஜூலை 10ஆம் தேதி அன்று நடைபெற விக்கிரவாண்டி சட்டப்பேரவை தொகுதி இடைத் தேர்தலில், தி.மு.க. விவசாய அணி நிர்வாகிகள் தீவிர பிரச்சாரத்தை மேற்கொண்டு, வெற்றிக்கனியை கழகத் தலைவர் அவர்களிடம் ஒப்படைத்திடும் அளவிற்கு தீவிர பிரச்சாரம் மேற்கொள்ள வேண்டுமென தி.மு.க. விவசாய அணியின் நிர்வாகிகளையும் இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் காவேரிப்பட்டணம் ஒன்றியம் கிழ்குப்பம் கிராமத்தில் புதிதாக கட்டப்பட்ட ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடத்தை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் தலைமை தாங்கி குத்துவிளக்கு ஏற்றி புதிய கட்டிடத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், ஒன்றிய செயலாளர் சாந்தமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர் அஸ்லாம், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சரவணன், சங்கர், ஊராட்சி மன்ற தலைவர் சண்முகம், ஒன்றிய கவுன்சிலர் பவித்ரா சுரேஷ், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ஜெயேந்திரன், இளையராஜா மற்றும் கழக நிர்வாகிகள், ஊர் பொதுமக்கள் ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர் .

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கே. கோவிந்தசாமி

ஜூன் 22 (2002)

கழகம் தொடங்கிய நாளிலிருந்தே கழகத்தின் உறுப்பினராகப் பணியாற்றியவர்.

1959, 1964, 1968 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர் தேர்தலில், மயிலை பகுதியிலிருந்து கழகச் சார்பில் தொடர்ந்து போட்டியிட்டு, வெற்றி பெற்று அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றதோடு, துணை மேயராகவும் பொறுப்பு வகித்தவர்.

1962ஆம் ஆண்டு நடைபெற்ற விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்று, ஆறுமாதம் சிறைவாசம் அனுபவித்ததோடு, கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

அறிஞர் அண்ணா அவர்களால் ‘சாது’ கோவிந்தசாமி என்று செல்லமாக அழைக்கப்பட்டவர். தலைவர் கலைஞர் அவர்களின் பொற்கரங்களால் சுதந்திர பொன்விழா கேடயம் பெற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.